கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொகையையும் முழுமையாக நாம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். எனவேதான், பகுதி நேரக் கடைகளைத் திறப்பதற்கு அரசு தயாராக இருக்கிற இந்த நேரத்திலே, வாடகை இல்லாமல் கட்டிடத்தை அந்தந்தப் பகுதியிலே இருப்பவர்கள் கொடுப்பார்களேயானால், அங்கு பகுதி நேரக் கடைகளை அமைக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் — விடைகள் நேரம் அவையின் முன் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 133, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

133—

குடுமியான்மலை அரசுப் பண்ணையில் விவசாயக் கல்லூரி.

*336—திரு. சி. குழந்தைவேலு:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, குடுமியான்மலை அரசுப் பண்ணையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் உள்ள பண்ணையை வேளாண்மைக் கல்லூரியாக மாற்றும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடுமியான்மலை விவசாயப் பண்ணை சுமார் 200 ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலங்களை உடையதாகும். மேலும், அங்கு ஒரு கல்லூரி நடைபெறுவதற்கு வேண்டிய அனைத்துக் கட்டிட வசதிகளும் உள்ளன. மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் குடுமியான் மலையில் விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசின் கோப்பில் இருந்தது. இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களது ஆட்சியிலாவது அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கும் திட்டம் ஏற்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

1992 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாவலத் தீவின் நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் குடுமியான்மலையில் உள்ள பண்ணையை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக ரூ. 88.38 இலட்சம் செலவில் இந்த அரசு அந்தப் பண்ணையை விரிவுபடுத்தி உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 134, டாக்டர் பெ. வீரபாண்டியன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

134—

செங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடு.

*4431—டாக்டர். பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. தாலுக்கா தலைமையிடமாக உள்ளது. பல்வேறு துறைகளில் அரசு ஊழியர்கள் கிட்டத்தட்ட 1,000 பேர்கள் பணியாற்றுகின்றனர். செங்கம் மிகவும் சிறிய நகரம். அங்கு வாடகைக்கு வீடுகள் கிடைப்பது மிகவும் அரிது. அதோடு செங்கத்திற்கு வந்து பணியாற்ற சிறந்த அரசு ஊழியர்கள் மறுத்துவிடுகிறார்கள். அங்கு வாடகைக்கு வீடுகள் கிடைப்பதில்லை என்பதால் வர மறுத்து விடுகிறார்கள். ஒருவேளை சிறந்த ஊழியர்கள் அங்கு வருவதாக இருந்தால் மாற்றல் வாங்கி அவர்களே சென்று விடுகிறார்கள்..........

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS